## இடைப்பாடி நகராட்சி

## 28.07.2023—ம் தேதியில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள் 1

**நகர் மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்:**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர்கள், மன்றத் துணைத் தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் பின்வருமாறு மதிப்பூதியம் வழங்க.

1) **நகர் மன்ற தலைவர் – ரூ. 15,000/—**
2) **நகர் மன்ற துணைதலைவர் – ரூ. 10,000/—**
3) **நகர் மன்ற உறுப்பினர்கள் – ரூ. 5,000/—**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, அரசானை (நிலை) எண்.98 நாள்:13.07.2023ல் உத்திரவு வழங்கியதற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதியார்** அவர்களுக்கு கோடான கோடி நன்றியினை தெரிவித்துத் இந்நகரமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| **தீர்மான எண்:426** | **நாள். 28.07.2023** |
|---|---|
| தீர்மானிக்கப்பட்டது | |

**பொருள் 2**

அரசாணை (நிலை) எண். 98, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.13.07.2023ல் நகராட்சி நிர்வாக இயக்குநரது கடிதம் ந.க.எண்.24470/2019/எம்.எ2, நாள்.05.09.2022 கடிதத்தில் மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சிகள் மற்றும் போரூராட்சிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் முழுநேர மக்கள் பணியில் ஈடுபட்டுள்ளதால் தங்களுக்கு மதிப்பூதியம் வழங்க வேண்டும் என 13.04.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சம்மந்தப்பட்டவர்கள் கோரிக்கை வைத்துள்ளதாகவும், எனவே அதனை பரிசீலனை செய்து மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு மாதந்தோறும் பின்வருமாறு மதிப்பூதியங்களை வழங்கிட முடிவு செய்து ஆணையிடப்பட்டது.

| **வ.எண்** | **மதிப்பூதிய விவரம்** | **மாதம் ஒன்றிற்கு மதிப்பூதியம் (ரூபாயில்)** |
|---|---|---|
| 1 | நகர்மன்ற தலைவர் | 15000 ( ரூபாய் பதினைந்தாயிரம்) |
| 2 | நகர்மன்ற துணைத்தலைவர் | 10000 ( ரூபாய் பத்தாயிரம்) |
| 3 | நகர்மன்ற உறுப்பினர் | 5000 (ரூபாய் ஐந்தாயிரம்) |

மேற்காணும் விவரப்படி ஜீலை 2023ம் ஆண்டு முதல் இந்நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு மதிப்பூதியம் வழங்கிட வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி மதிப்பூதியத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கலாம்.

| **தீர்மான எண்:427** | **நாள். 28.07.2023** |
|---|---|
| பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 3**

இடைப்பாடி நகராட்சியின் பழைய பேருந்து நிலையத்தை இடித்து புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் சேலம் மாவட்டம் மேட்டூர் அணையிலிருந்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் தண்ணீர் திறக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஜுன் 12ம் தேதி நேரில் வருகை தந்ததையொட்டி வரவேற்றும், இந்நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளின் விபரங்கள் மற்றும் நடைபெற்று வரும் திட்டபணிகளின் விபரங்களை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2605/2023/பி1, நாள்.23.06.2023ன் படியும் பட்டியல் தொகையை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள். | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினமணி (Express publications (Madurai) Private Limited | DHN8005660/ 11.06.2023 | ரூ.51975/– |
| 2 | தினகரன் ( KAL Publications (P) Ltd) | 3300429735/12.06.2023 | ரூ.29484/– |
| 3 | Evening Tamil Nadu | MT-0901/2023-24 / 22.06.2023 | ரூ.14490/– |
| 4 | மாலை தமிழகம் | 5978/15.06.2023 | ரூ.15330/– |

**அலுவலககுறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1537/2021/இ2

| தீர்மான எண்:428 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 4

இந்நகராட்சி அலுவலகத்திற்கு சொந்தமான ஸ்கார்பியோ ஈப்பு எண்.TN52AB2075 என்ற வாகனம் 20000 கி.மீ. அளவு கடந்துவிட்டதால் வாகனத்தை சர்வீஸ் மற்றும் இதர பணிகள் செய்ய SKS இந்தியா பிரைவேட் லிமிடெட், சேலம் நிறுவனத்திற்கு கொண்டு சென்று வரப்பட்டது. மேற்காணும் சர்வீஸ் மேற்கொண்டமைக்கு பட்டியல் எண்.RO24P000549, நாள்.06.06.2023ன் படி ரூ.9634/– என்னால் வழங்கப்பட்டது எனவும் மேற்காணும் தொகையை எனக்கு வழங்குமாறு திரு.பெ.சுப்ரமணி, ஈப்பு ஒட்டுநர், இடைப்பாடி நகராட்சி அவர்களின் விண்ணபத்தில் கோரியுள்ளார்.

எனவே, மேற்கண்ட பணியை அவசரம் அவசியம் கருதி மேற்கொண்டமைக்கும், செலவு தொகை ரூ.9634/–யை இந்நகராட்சி ஈப்பு ஒட்டுநர், திரு.பெ.சுப்ரமணி, அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவு தொகை ரூ.9634/–யை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஈப்பு ஒட்டுநர், திரு.பெ.சுப்ரமணி, அவர்களுக்கு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.867 /2022/இ2

| தீர்மான எண்:429 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 5

இடைப்பாடி நகராட்சியானது 30 வார்டுகளை உள்ளடங்கி சுமார் 28.22 ச.கி.மீ. பரப்பளவு கொண்ட முதல் நிலை நகராட்சி ஆகும். மேலும், இந்நகராட்சியின் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின் படி 54823 எண்ணிக்கையும், தற்பொழுது மக்கள் தொகை உத்தேசமாக 59891 கொண்டு உள்ளது.

மேலும், இந்நகராட்சியில் 1094 எண்ணிக்கையிலான சாலைகள் (Road, Street & Lane) சுமார் 152.49 கீ.மீ நீளத்திற்கும் உள்ளது மற்றும் பூலாம்பட்டியில் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சுமார் 11 கீ.மீ தூரத்திற்கு பிராதான குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள் சுமார் 161.00 கீ.மீ நீளத்திற்கு இந்நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் அரசின் நிதி உதவியுடன் பல்வேறு திட்டபணிகளான 15$^{th}$CFC, Amrut 2.0, SBM 2.0, KNMT, NSMT, I&A (New Bus stand), NNT, SUIDF, DAIF, CGF ஆகிய திட்டத்தின் கீழ் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், பொது நிதி, குடிநீர் நீதியின் கீழ் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை அரசாணை (நிலை) எண்.10, நாள்.23.01.2023—ன் படி, முதல் நிலை நகராட்சிக்கு பொறியியல் பிரிவிற்கு கீழ்காணும் விபரப்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பதவி | நிர்ணயம் செய்யப்பட்ட பணியிடங்கள் | தற்போது அலுவலகத்தில் பணிபுரியம் பணியாளர்கள் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் | 1 | 1 |
| 2 | உதவி பொறியாளர் | 1 | 1 |
| 3 | பணி மேற்பார்வையாளர் | 1 | 0 |
| 4 | படவரைவாளர் | 1 | 0 |
| 4 | பணி ஆய்வாளர் | 3 | 0 |
| | **மொத்தம்** | **7** | **2** |

மேற்காணும் விபரப்படி பொறியியல் பிரிவில் நகராட்சி பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகிய இருவர் மட்டுமே உள்ள நிலையில் நகராட்சியில் நடைபெற்று வரும் பணிகளை கண்காணிக்கவும் மற்றும் அலுவலக கோப்புகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், சேலம் மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அவ்வப்போது நடத்தப்படும் ஆய்வு கூட்டங்களில் கலந்து கொள்ள அவசியமாகிறது. இதனால் பணிகளில் மற்றும் கோப்புகளில் மேல்நடவடிக்கை மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டு வருகிறது.

மேலும், தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு (J1) துறை அரசாணை எண்.(2D) No.36, நாள்.16.06.2023—ன் படி திட்டப்பணிகள் மற்றும் பொது நிதியின் கீழ் நடைபெறும் பணிகளை கண்காணிக்க தகுதி வாய்ந்த இளநிலை பொறியியல் பட்ட படிப்பு (B.E-Civil Enginnering) முடித்த திறனுள்ள நபர்களை Skilled-Grade-1ன் கீழ் 2 எண்ணிக்கையில் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணியமர்த்தவும் இவ்வரசாணையின் படி நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச அடிப்படை ஊதிய விகிதம் (Minimum rate of Basic wages) தலா ரூ.15000/— வழங்கவும் (ஒரு மாதத்திற்கு) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1202 /2023/இ2

| **தீர்மான எண்:430** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 6

இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.20, குலாளர் தெரு காட்டுவலவு பகுதியில் மழைநீர் வடிகால் வசதி அமைத்து தர கோரி நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதன் படி, இடத்தினை நேராய்வு செய்யப்பட்டது, அப்பகுதியில் மழைநீர் வடிகால் வசதி இல்லாத காரணத்தினால் மழை காலங்களில் மழைநீர் தேங்குவதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் மேற்காணும் பகுதியில் புதிய மழைநீர் வடிகால் வசதி அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவுத்தொகையை எதிர்வரும் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.976 /2023/இ2

| **தீர்மான எண்:431** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 7

இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் பிரதான சாலைக்கும் மற்றும் தெருக்களில் இணைப்பு சாலைக்கும் இடையே உள்ள பகுதியானது சேதமடைந்து பொதுமக்களுக்கு பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ளதால் அதனை சரிசெய்யுமாறு நகர்மன்ற தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதன் படி இடத்தை நேராய்வு செய்யப்பட்டது, சேலம் பிரதான சாலை நைனாம்பட்டி தெருக்களில் இணைப்பு சாலைகளுக்கும் இடையே உள்ள பகுதியில் குடிநீர் குழாயின் பழுது நீக்கும் பணிக்கு சாலையை வெட்டி பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், இந்நகரின் பல்வேறு இடங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதால் இதனை Bell Mouth அமைத்து சீரமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

<u>ந.க.எண்.        /2023/இ2</u>

| **தீர்மான எண்:432** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

<u>பொருள் 8</u>

இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.30 அருந்ததியர் தெரு பகுதியில் திரு.பழனிசாமி வீடு முதல் கணேசன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் விண்ணபத்தில் கோரியுள்ளதன் படியும், மேலும், இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் மேற்காணும் இடம் நேராய்வு செய்யப்பட்டதில் விண்ணபத்தில் கோரியுள்ள இடமானது மிகவும் தாழ்வான பழுதடைந்த Street Categery–யை சார்ந்த சாலையாகும். மேலும், மழைகாலங்களில் இச்சாலையில் மழைநீர் தேங்குவதால் பொதுமக்களின் சுகாதார கேடுவிளைவிக்கும் வண்ணமும், போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக உள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். எனவே, மேற்கண்ட சாலையை சிமெண்ட் சாலையாக அமைக்கவும் மற்றும் இரு இடங்களில் சிறுபாலம் அமைக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவுத்தொகையை எதிர்வரும் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.      /2023/இ2

| **தீர்மான எண்:433** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

<u>**பொருள் 9**</u>

இடைப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.26, ஆலச்சம்பாளையம் மாரியம்மன் கோவில் எதிர்புறம் உள்ள அங்கன்வாடி மையம் பழுதடைந்துள்ளதால் அதை இடித்து அப்புறப்படுத்த வேண்டி அப்பகுதி ஊர் பொதுமக்களின் மனுவின் அடிப்படையில் நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களுடன் மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டதில் அங்கன்வாடி மையம் மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது, மேலும், இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, மேற்கண்ட அங்கன்வாடி மையத்தை இடிக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.174, நாள்.14.12.2022ன் படி அனுமதி பெற்று இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட திட்ட பிரேரணையை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலககுறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்காலம்

<u>**ந.க.எண்.1283/2023/இ2**</u>

| தீர்மான எண்:434 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 10**

இடைப்பாடி நகராட்சியில் புதிய குடிநீர் மேம்பாட்டு திட்டம் JICA நிதி உதவியின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் திட்டப் பணிகள் செய்து முடிக்கப்பட்டு நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு தற்பொழுது நகராட்சி வசம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மின் மோட்டார்களை இயக்கவும், பகிர்மான மற்றும் பிரதானக் குழாய்களை பராமரிக்கும் பணிக்கு 11 பணியாட்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விலை விகிதத்தின் படி சப்ளை செய்யவும், குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு தேவையான குளோரின் சிலிண்டர்கள் சப்ளை செய்து பராமரிக்கவும் 01.04.2023 முதல் 30.06.2023 வரை ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 30.06.2023வுடன் மேற்படி பணி உத்தரவு காலம் முடிவடைவதால் மேற்படி பணியாட்களை சப்ளை செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு 01.07.2023 முதல் 30.09.2023 வரை 3 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளவும் மற்றும் மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட திட்டப்பிரேரணைக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் மேற்காணும் 11 பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்த வழங்கும் உத்திரவை ரத்து செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்திரவை அமுல்படுத்தவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவுத்தொகை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் 01.07.2023 முதல் 30.09.2023 வரை கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்: 255/2022/இ2)**

| தீர்மான எண்:435 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 11**

இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான ஏரிரோடு சின்னமனலி, பார்க் பள்ளி, வெள்ளார்நாயக்கன்பாளையம் மற்றும் வீரப்பம்பாளையம் ஆகிய தொடக்கபள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள அடிப்படை வசதி பணிகள் செய்ய அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களின் கடிதத்தின் மூலம் கோரியுள்ளதன் படி இடம் நேராய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டது.

**1) ஏரிரோடு நகராட்சி தொடக்கப்பள்ளி**

அ) சுற்றுசுவர் பழுதடைந்த நிலையில் உள்ளது

ஆ) கழிப்பிடம் டைல்ஸ்

இ) Window Shutter

ஈ) Roof slab Rectification

**2) சின்னமணலி நகராட்சி தொடக்கப்பள்ளி**

அ) Roof Sheet பழுதடைந்த நிலையில் உள்ளது.

ஆ) Electrical Works

**3) (பார்க் பள்ளி) நகராட்சி தொடக்கப்பள்ளி**

அ) சுற்றுசுவர் பழுதுநீக்கம் பணி

ஆ) இதர அடிப்படை வசதிகள் பணி

**4) வெள்ளார்நாயக்கன்பாளையம் நகராட்சி தொடக்கப்பள்ளி**

அ) பழுதடைந்த முன்பகுதியில் உள்ள இடதுபுற கட்டிடத்தை சீரமைத்தல்.

**5) வீரப்பம்பாளையம் நகராட்சி தொடக்கப்பள்ளி**

அ) பள்ளி வகுப்பறைகளின் முன் பகுதியில் Paver Block கற்கள் பதித்தல்

மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் பழுதடைந்த அடிப்படை வசதிகள் பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகையை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.1283/2023/இ2</u>**

| **தீர்மான எண்:436** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**<u>பொருள் 12</u>**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் ந.க.எண்.19731/2023/CFC-1, நாள்.17.07.2023ன் படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, கவுண்டம்பட்டி முச்சந்தி பகுதியில் உள்ள இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, சென்னை அவர்களுக்கு சொந்தமான இடத்தில் 15th CFC Health Grant 2023–2024 திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.120.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. அதன் படி, மேற்கண்ட பணிக்கு மண் பரிசோதனை மற்றும் Structural Design, Detailed Estimate as per type of design மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற வேண்டி தனியார் கலந்தாய்வர் (Private Consultant) மூலம் நடவடிக்கை மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புளளியின் மொத்த மதிப்பீடு தொகையில் ஒரு சதவீதம் தொகையான ரூ.1,20,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்காணும் தனியார் கலந்தாய்வர்க்கான (Private Consultant) செலவு தொகையை 15th CFC Health Grant 2023–2024 / நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.1160/2023/இ2</u>**

| **தீர்மான எண்:437** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**<u>பொருள் 13</u>**

இந்நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, இந்நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகால் வசதியை சீரமைக்கவும் மற்றும் புதிதாக நகரின் பல்வேறு இடங்களில் மழைநீர் வடிகால் வசதி அமைக்கவும் உத்தேச செலவினம் ரூ.800.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உள்ளது. மேலும், இந்நகராட்சியின் நிதி நிலை போதுமானதாக இல்லாததால் அரசின் மான்யத் தொகை பெற திட்ட பிரேரணை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு –</u>** மன்றம் அனுமதிக்காலம்

**<u>ந.க.எண்.1279 /2023/இ2</u>**

| **தீர்மான எண்:438** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 14

இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி தொடக்கப்பள்ளி, தாவந்தெரு பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி பிரதான சாலையில் உள்ள நுழைவு வாயிலை அடைத்து பின்புறம் புதிதாக சுற்றுசுவர், நுழைவாயில் அமைக்கவும் மற்றும் பருவ மழை காலங்களில் பள்ளியில் உட்புற பகுதியில் மழைநீர் தேங்காமல் தளம் மட்டத்தை உயர்த்தவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட பணியை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். /2023/இ2**

| தீர்மான எண்:439 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 15

இடைப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.24, ஆலச்சம்பாளையம் ரோட்டில் உள்ள சமுதாய கழிப்பிட கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட சமுதாய கழிப்பிடத்தில் உள்ள செப்டிக் டேங்க் மேல் தளம் பழுதடைந்து உள்ளது. மேலும், கழிப்பறையில் உட்பகுதியில் உள்ள பழுதடைந்த பீங்கான்கள், Electrical Point பகுதடைந்த சிமெண்ட் கான்கிரீட் Tank வெளிபுறம் சீரமைக்கவும், கழிவுநீர் சீரான முறையில் Disposal செய்ய வழிவகை செய்யவும் மற்றும் இதர அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.3,00,000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். /2023/இ2**

| தீர்மான எண்:440 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 16

இடைப்பாடி நகராட்சி வார்டு எண் 1 முதல் 30 வரையில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு 3 Star அங்கீகாரம் பெற வேண்டி அக்கழிப்பறை கட்டிடத்தில் Soap Tray, Towel Rail, Mirror மற்றும் Wash Basin ஆகிய அத்தியாவசிய வசதிகள் செய்ய அவசியமாகிறது. எனவே, மேற்காணும் அத்தியாவசிய தேவைகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். /2023/இ2

| தீர்மான எண்:441 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 17

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 1) பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்மா உணவகத்திலுள்ள மின் மோட்டார்க்கு பதிலாக புதிய மின் மோட்டார் பொருத்தும் பணி, 2) வார்டு எண் 12 வெள்ளாண்டிவலசு MCC மையத்திலுள்ள மின் மோட்டார் பழுதுகளை சரி செய்தல் பணி 3) பழைய நகராட்சி அலுவலகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்திற்கு புதிய மின் மோட்டார் பொருத்தும் பணி 4) நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டரின் பழுது சரி செய்தல் மற்றும் 5) ஆவணியூர் புறவழிச் சாலையில் அமைந்துள்ள உயர் கோபுர மின் விளக்கு பழுது சரி செய்தல் பணி ஆகிய பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,20,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்கண்ட செலவுத்தொகை ரூ.1,20,000/—யை வரிசை எண் 1 முதல் 3 வரை குடிநீர் நிதியிலிருந்தும் மற்றும் வரிசை எண் 4 மற்றும் 5 பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 989/2023/இ1)**

| **தீர்மான எண்:442** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 18

இந்நகராட்சிக்குட்பட்ட வீட்டுவசதி வாரியம் நீரேற்று நிலையம் (Housing Board Boosting Station) மற்றும் பூலாம்பட்டி சாலையில் தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி (GLR Boosting Station) ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி குளோரின் அமைப்புகள் செயல்பட தேவைப்படும் திரவ குளோரின் (Sodium Hypo-Chlorine Liquid) 2023–2024ம் ஆண்டிற்கு முதல் பகுதியாக கொள்முதல் செய்யும் பணியினை மேற்கொள்ளவும் மற்றும் அதற்க்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.5,00,000/— யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 948/2023/இ1)**

| **தீர்மான எண்:443** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 19**

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 08 போயர் தெருவில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள கைபம்புகளை அகற்றி விட்டு மின் விசை மோட்டார் அமைத்து சின்டெக்ஸ் உடன் அமைத்தல் பணி மற்றும் காவல் நிலையம் அருகில் புதியதாக ஒரு சின்டெக்ஸ் டேங்க அமைத்தல் பணிக்கும் உத்தேச செலவினம் தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.2,50,000/—யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்:988 /2023/இ1)**

| **தீர்மான எண்:444** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 20**

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் அமைந்துள்ள 26 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு வால்வு திருப்புநர் போதுமானதாக பணியாட்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் 20 எண்ணிக்கை பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு 01.06.2023 முதல் 30.07.2023 வரை ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 30.07.2023வுடன் மேற்படி பணி உத்தரவு காலம் முடிவடைவதால் மேற்படி பணிக்கு அதே ஒப்பந்ததாரரின் அதே விலை விகிதத்திற்கு 8.65 இலட்சத்திற்கு 01.08.2023 முதல் 31.10.2023 வரை 3 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவுத்தொகை ரூ.8.65 இலட்சத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் 01.08.2023 முதல் 31.10.2023 வரை கால நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 1854/2022/இ1)**

| **தீர்மான எண்:445** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 21

செயற்பொறியாளர் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண் 830-ED/AE(P)/2021, நாள் 19.10.2022ல் தமிழ்நாடு நகர்புறப் வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–26 ஆலச்சம்பாளையம் பகுதியில் புதியதாக 352 அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும், அந்த 352 குடியிருப்பு பகுதியில் 20 எண்ணிக்கை தெரு விளக்குகளுக்கு தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் மின் கம்பங்கள் அமைத்த பின் அவற்றில் 20W to 45W LED தெருவிளக்குகள் மட்டும் அமைப்பதற்க்கு மதிப்பீடு தொகை ரூ. 90000/–க்கு தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மேற்கண்ட தொகையை செலுத்த அறிவுறுத்தப்பட்டது. அதன் படி மேற்கண்ட தொகை ரூ.90000/– பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட 352 அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் 20 எண்ணிக்கையில் LED தெரு விளக்குகள் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி தொகை 90000/– தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், சேலம் அவர்கள் வரைவோலை (எண்: 858845 Union Bank of India) மூலம் செலுத்தப்பட்டதை இந்நகராட்சி பொது நிதி வங்கி கணக்கில் டெபாசிட் செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 933/2020/இ1)**

| **தீர்மான எண்:446** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 22**

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–1,2,3,4,5,7 மற்றும் 9 ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டில் அமைந்துள்ள கைபம்புகளை அகற்றி விட்டு சோலார் மூலம் இயங்கும் மின் விசை மோட்டார் அமைத்து அதன் அருகில் 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் உடன் அமைத்தல் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் அத்தியாவசிய நலன் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.9,00,000/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 986 /2023/இ1)**

| **தீர்மான எண்:447** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 23**

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–11,13,15,17,18 மற்றும் 19 ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டில் அமைந்துள்ள கைபம்புகளை அகற்றி விட்டு சோலார் மூலம் இயங்கும் மின் விசை மோட்டார் அமைத்து அதன் அருகில் 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் உடன் அமைத்தல் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் அத்தியாவசிய நலன் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.9,00,000/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 980 /2023/இ1)**

| **தீர்மான எண்:448** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 24**

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–06,10,14,20,25,27 மற்றும் 28 ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டில் அமைந்துள்ள கைபம்புகளை அகற்றி விட்டு சோலார் மூலம் இயங்கும் மின் விசை மோட்டார் அமைத்து அதன் அருகில் 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் உடன் அமைத்தல் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.9.70 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் அத்தியாவசிய நலன் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.9,70,000/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 981 /2023/இ1)**

| **தீர்மான எண்:449** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 25**

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் 20 வாட்ஸ் 195 எண்ணிக்கை எல்.இ.டி மின் விளக்குகள் மற்றும் 125 வாட்ஸ் 48 எண்ணிக்கை எல்.இ.டி மின் விளக்குகள் பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் அத்தியாவசிய நலன் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 987 /2023/இ1)**

| **தீர்மான எண்:450** | **நாள். 28.07.2023** |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

**பொருள் 26**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள ஜெ.ஜெ.வணிக வளாக TUFIDCO திட்ட கடை எண்.12,36 ஆகிய இரண்டு கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.05.2023ஆம் தேதி நடைபெற்றதில் மேற்கண்ட கடைகளுக்கு ஏலம் கோர ஒருவரும் முன் வராத நிலையில் ஒப்பந்தப்புள்ளி கேள்வி பெறப்பட்டதன் ஒப்பு நோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடையின் விபரம் | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | தற்போதைய உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி ரூ | உச்ச ஏலக் கேள்வி ரூ |
|---|---|---|---|---|
| 1 | TUFIDCO திட்ட கடை எண்.12 | 1)திரு.ஆர்.ராஜா த/பெ.ராஜீ 11B, மோட்டூர் வி.என்.பாளையம், இடைப்பாடி | ரூ.4500/– | – |
| | | 2)திரு.ஏ.ரவி த/பெ.ஆறுமுகம், மோட்டூர், வி.என்.பாளையம், இடைப்பாடி | ரூ3900/– | – |
| 2 | TUFIDCO திட்ட கடை எண்.36 | 1) திரு.ஜி.அம்பலவாணன் 51D 9 காந்திநகர், வெள்ளாண்டிவலசு, இடைப்பாடி | ரூ.3450/– | – |
| | | 2) திரு.ஏ.முரளி கிருஷ்ணன் த/பெ.அர்த்தனாரி கவுண்டம்பட்டி, இடைப்பாடி | ரூ3350/– | – |

அலுவலககுறிப்பு

அ) வரிசை எண்.1 பேருந்து நிலைய ஜெ.ஜெ.வணிக வளாக TUFIDCO திட்ட கடை எண்.12க்கு எட்டு முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பழைய வாடகையை விட குறைவாகவே கோரப்பட்டது. எனவே இந்நகராட்சியின் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு 05.05.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் திரு.ஆர்.ராஜா த/பெ.ராஜீ இடைப்பாடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வி அதிகமாக உள்ளது. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ஆ) வரிசை எண்.2 பேருந்து நிலைய ஜெ.ஜெ.வணிக வளாக TUFIDCO திட்ட கடை எண்.36க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் திரு.ஜி.அம்பலவாணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது பழைய வாடகையைவிடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியைவிடவும் அதிகமாக உள்ளதால் இவ்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 43/2022/பி4)

| தீர்மான எண்:451 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

<u>**பொருள் 27**</u>

இந்நகராட்சிக்கு எதிராக சொத்துவரி பெயர் மாற்றம் குறித்து திருமதி.கவிதா என்பவர் மாவட்ட நீதிமன்றம், சேலம் வழக்கு எண்.OS.No.357/2023, வழக்கு தொடுத்துள்ளார். மேற்படி வழக்கில் ஆஜராகவும் வழக்கை தொடர்ந்து நடத்தவும் வழக்கு கட்டணம் ரூ.15000/– திரு.மதன்மோகன், அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 1068/2023/அ1)

| தீர்மான எண்:452 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 28

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு, தற்சமயம் மழைக்காலம் என்பதால் நோய் தடுப்பு பணிகளுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் கொள்முதல் செய்யவும், இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் 3 நுண்உர மையங்களில் உள்ள இயந்திரங்கள் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் பொதுசுகாதாரப் பணிகள் பாதிப்படையாமல் இருக்க உடனுக்குடன் சரிசெய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| தீர்மான எண்:453 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

பொருள் 29

இடைப்பாடி நகராட்சியில் பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் சப்ளையர்களின் பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரித் தொகையினை வருமானவரி அலுவலகத்திற்கு செலுத்தி ஒவ்வொரு காலாண்டிற்கும் திரு.எம்.பரமேஸ்வரன் இடைப்பாடி ஆடிட்டர் மூலம் ரிட்டன் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி ரிட்டன் தாக்கல் செய்ய 2021–22ம் ஆண்டுக்கான உத்தேச செலவுத் தொகை ரூ.4000/–ற்கும் அதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1232/2021/பி1)

| தீர்மான எண்:454 | நாள். 28.07.2023 |
|---|---|
| அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது | |

ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி.